JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

C.C.No. 129/2022 Date:09.05.2023 P.W. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | கிருஷ்டிணா |
| தந்தை பெயர், க/பெ | : | முத்தமிழ்செல்வன் |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 09th day of May 2023.

எதிரிகள் 1, 2 ஆஜரில் உள்ளார்கள்

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது நாராயணன் 2வது தெரு, அண்ணா மேற்கு சென்னையில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் நன்கு அறிவேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 19.06.2021ம் தேதி இரவு 10.00 அல்லது 10.30 மணியளவில் நானும் எனது தோழி வெண்ணிலாவும் எஸ்எம் நாராயணன் நகரிலிருந்து கண்ணதாசன் தெருவிற்கு நான் என்னுடன் வெண்ணிலா என்பவரும் டிஎன் 07 சியு 0307 ஆக்டிவா 5ஜி என்ற வாகனத்திலும் இன்னொரு நபர் சுசிலா என்பவர் எமஹா டிஎன் 85 சி 9128 என்ற இருசக்கர வாகனத்தில் வேலம்மாள் பள்ளி அருகே சென்றுக்கொண்டியிருந்த போது அப்பொழுது இரண்டு நபர்கள் எங்களிடம் வந்து மிரட்டி எங்களை அடித்துவிட்டு என்னுடன் வந்த சுசிலா என்பவரின் எமஹா பைக்கை பறித்து சென்றுவிட்டார்கள்.

2. அந்த நபர்கள் தான் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். நாங்கள் அங்கு இருக்கும்போது சுற்றுகாவல் போலீசார் அங்கு இருந்தார்கள். அவர்களுக்கு தெரிவித்துவிட்டு மறுநாள் காலையில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அதன்பின்பு காவல் நிலையத்திலிருந்து வண்டி கிடைத்ததாக கூறி காவல் நிலையத்தில் அழைத்தார்கள். அங்கு அந்த வண்டி இருந்தது. அதனை நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் இது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆகும். எதிரிக்ள அன்று இரவு எங்களை மிரட்டினர்வர்களை நான் பார்த்தேன் அடையாளம் தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3. புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல என்னுடன் வந்த நபர் எழுதினார். புகாரில் வலது மேல் பகுதியில் மற்றும் புகாரின் முடிவில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று இரவே நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் அன்று இரவு ஆகிவிட்டதால் நாங்கள் உடனடியாக சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுக்க இயலவில்லை. சுற்றுக்காவலர்கள் இரவு காலத்தாமதமானதால் மறுநாள் காலையில் புகார் கொடுக்கும்படி கூறினார். முதல் விசாரணையில் கூறியது போல் புகாரில் எங்களை அடித்துவிட்டு இருசக்கர வாகனத்தை பறிதது சென்றதாக நான் கூறவில்லை என்றால் சரிதான்.

4. சம்பவமானது வேலம்மாள் பள்ளி வாசல் அருகே நடைபெற்றது என்றாலும் அங்கு சிசிடிவி கேமராக்கல் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேலம்மாள் பள்ளி நுழைவு வாயிலில்

எப்பொழுதும் வாட்ச்மேன் இருப்பார்கள் என்றால் நான் சம்பவத்தின் போது வாட்ச்மேன் யாரையும் பார்க்கவில்லை. புகாரில் எதிரிகளின் அங்க அடையாளங்களையும் மற்றும் அவர்கள் அன்றைய தினம் அணிந்திருந்த ஆடைகளின் நிறத்தையும் நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் சிறைச்சாலை சென்று எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்று இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டியபோது எதிரிகளை நான் அடையாளம் காட்டினேனா என்றால் என்னிடம் அவர்களுடைய புகைப்படத்தை காட்டினார்கள். புகைப்படத்தில் எதிரிகளை அடையாளம் காட்டினேன்.

5. இருசக்கர வாகனத்தை என்னிடமிருந்து பறித்து செல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய தோழி சுசிலாவிடமிருந்து தான் இருசக்கர வாகனத்தை பறித்து சென்றார்கள் என்றால் சரிதான். சுசிலா நேரடியாக புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனமானது சுசிலாவின் சகோதரிக்கு சொந்தமானது என்றால் சரிதான். சுசிலாவின் சகோதரி இது சம்மந்தமாக புகார் ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை. ஆனால் புகாரை சுசிலாவின் சகோதரி தான் எழுதினார். புகாரை எத்தனை மணிக்கு கொடுத்தோம். காலை 10.00 மணிக்கு மேல் கொடுத்தோம். போலீசார் என்னை எப்பொழுது விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் நாங்கள் புகார் கொடுத்த போதே விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

6. உண்மையில் நான் கூறியது போல் சம்பவம் நடைபெற்றுயிருந்தால் என்னுடைய தோழியான சுசிலா அல்லது அவருடைய சகோதரி புகார் கொடுத்திருப்பார் என்றாலும் போலீசார் தயார் செய்த பொய் புகாரின் மீது வழக்கு பதிவு செய்ததற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் நீதிமன்றத்தில் வைத்து தான் எதிரிகளை என்னிடம் அடையாளம் காட்டினார்கள் என்றாலும் நான் இதற்கு முன்பாக எதிரிகளை பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பாக நான் பார்த்துள்ளேன். சுசிலாவின் இருசக்கரவாகனத்திற்கு 10 அடி தூரத்தில் நான் பின்னால் எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டியிருந்தேன். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றாலும் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur